PERMANENT REFERENCE

# Study on the Utilization of Clay in Batticaloa District

Faculty of Commerce & Management
14 JAN 2004
Eastern University, Sri Lanka.

Dept of Economics
Eastern University,
Sri Lanka.
12 JAN 2004
Faculty of Commerce & Management.

338.276 1072
CAR

MISS.CARMALIN ARULRAJAH

FCM650
Project Report
Library - EUSL

DEPARTMENT OF MANAGEMENT
FACULTY OF COMMERCE AND MANAGEMENT
EASTERN UNIVERSITY SRI LANKA.

2003.

# பொருளடக்கம்.


| | பக்க எண் |
|---|---|
| நன்றியுரை | I |
| ஆய்வின் சுருக்கம். | II |
| அத்தியாயம் 1 | |
| ஆய்வின் அறிமுகம் | 01 - 05 |
| அத்தியாயம் 2 | |
| வளங்கள் பற்றிய நூலாய்வு. | 06 - 18 |
| அத்தியாயம் 3 | |
| ஆய்வுப் பிரதேசத்தின் பின்னணியும், களிமண் உற்பத்தி தொடர்பான தற்போதைய நிலையும். | 19 - 32 |
| அத்தியாயம் 4 | |
| தரவு முன்வைத்தலும், பகுப்பாய்வும். | 33 - 49 |
| அத்தியாயம் 5 | |
| பிரச்சனைகளும், தீர்வுகளும் விதந்துரைப்புக்களும். | 50 - 63 |
| உசாத்துணை நூல்கள். | 64 |
| பின்னிணைப்பு | |
| வினாக் கொத்து | |

## ஆய்வின் சுருக்கம்.

"ஒரு பிரதேசத்தின் அபிவிருத்தி அப்பிரதேசத்தில் கிடைக்கக் கூடிய வளங்களின் வினைத்திறனான பயன்பாட்டிலேயே தங்கியுள்ளது. இதன் படி ஒரு பிரதேசம் அபிவிருத்தியடைய வேண்டுமானால் கிடைக்கக் கூடிய வளங்களை இனங் காண்பதும் அவற்றை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களை சிறப்பாக நிறுவுவதும் அவசியம்"

இந்த வகையில் "மட்டக்களப்பு மாவட்டத்தின் களி மண்வளமும், அதன் பயன்பாடும்" எனும் தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்படும் எனது ஆய்வானது மாவட்டத்தில் கிடைக்கக் கூடிய களிவளத்தை இனங்காட்டி அதனை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களை சிறப்பாக மேற்கொள்வதன் மூலம் களிவளத்தின் வினைத்திறனான பயன்பாட்டை அடைவதற்குரிய வழிவகைகளை எடுத்துக் காட்டுகின்றது. இதன் படி தற்போதைய நிலையில் மாவட்டத்தில் களிவளத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களின் நிலமை எடுத்துக் காட்டப்படுகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் கிடைக்கக்கூடிய களி வளம் அண்ணளவாக 20% மான நிலப்பரப்பில் காணப்படுகின்றது. மாவட்டத்தில் கிடைக்கக் கூடிய களிவளம் பிரதேசரீதியாக எடுத்துக் காட்டப்படுகின்றது. இந்த வகையில் கிடைக்கக் கூடிய களிவளத்தை அடிப்படையாகக்கொண்டு எதிர்காலத்தில் சாத்தியமான கைத்தொழில்களை நிறுவுவதுடன் அதனூடாக பிரதேசத்தில் கைத்தொழில் ரீதியான அபிவிருத்திக்கு வழி ஏற்படுத்தவும் கூடிய வாய்ப்புக்களை எடுத்துக் காட்டப்படுகின்றது.

மாவட்டத்தில் மட்பாண்ட உற்பத்திக் கைத்தொழில், செங்கல் உற்பத்திக் கைத்தொழில் என்பன ஒழுங்கமைக்கப்படாத துறைகளாகவே காணப்படுகின்றன. இத் துறைகள் எதிர்நோக்கும் சவால்களும், அவற்றை எதிர்காலத்தில் தவிர்ப்பதற்கான வழிமுறைகளும் இவ்வாய்வின் மூலம் எடுத்துக் கூறப்படுகின்றது.